**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 210/2015 |
| Deposition of witness for | : | PW: 1 |
| | | LW: 1 |
| Name | : | ரவி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2022

<u>**முதல் விசாரணை**</u>

நான் திண்டுக்கல் அருணாச்சலம் நகரில் குடியிருந்து வருகிறேன். KC Diary Product Lmt -ல் மேலாளராக 7 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான பால் விற்பனை யூனிட் தஞ்சாவூர் , வல்லம் அருகில் செயல்பட்டு வருகிறது. எங்களது தலைமை அலுவலகம் வேடசந்தூரில் இருந்து பால் விற்பனை நிலையங்களுக்கு வாகனத்தின் மூலம் பால் பாக்கெட்டுகள் கொண்டு சென்று வழங்குவது வழக்கம். அதே வாகனத்தில் தஞ்சாவூர் யூனிட்டில் இருந்து பால்பாக்கெட்டுகளுக்கான பணத்தை அதன் மேலாளார் சேகரித்து எங்களது பால்வாகனத்தில் உள்ள டிரைவர் வசம் கொடுத்து தலைமை அலுவலகம் வேடசந்தூருக்கு அனுப்பிவைப்பது வழக்கம். அந்த பணத்தை தலைமை அலுவலக கணக்காயரிடம் ஒப்படைப்பு செய்வார். இது வழக்கமான நடைமுறையாகும். கடந்த 01.05.2014 முதல் 31.05.2014 வரையிலான தஞ்சாவூர் யூனிட் பால் விற்பனைமையத்திலிருந்து டிரைவர் வசம் பணம் ரூ.1034822/- மட்டும் 01.06.2014 தேதியில் கொடுக்கப்பட்டு தலைமை அலுவலகம் வந்த டிரைவர் பெருமாள் (எ) மணி பணத்தை கொடுக்காமல் சென்றுவிட்டார். தஞ்சாவூர் யூனிட்டிலிருந்து நாங்கள் அனுப்பிவைத்த பால் கொள்முதலுக்கான பட்டியல் அறிக்கையை 16.06.2014 ஆம் தேதி பார்வையிட்டபோது பணம் குறைவது கண்டறியப்பட்டது. தஞ்சாவூரில் இருந்து பணம் கொடுத்து அனுப்பிவைக்கப்பட்டபோது அங்கு ஒரு பதிவேடு பராமரிப்பார்கள். பணத்தை கொடுத்து ஒப்புகை கையெழுத்துப்பெற்று அனுப்பிவைப்பது வழக்கம். நாங்கள் பல்வேறு யூனிட்டுகளின் கணக்கு வழக்குகளையும் சரிபார்த்தபொழுது தஞ்சாவூரில் யூனிட்டிலிருந்து டிரைவர் பெருமாற் (எ) மணி மூலம் அனுப்பிவைக்கப்பட்ட தொகை குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. நாங்கள் அலுவலகத்தில் டிரைவர் பெருமாள் (எ) மணியை அழைத்து விசாரணை செய்தபோது வாகனத்தை நிறுத்திவிட்டு,

பணத்தை கொடுக்காமல் மறந்துவிட்டு சென்றதாக கூறினார். பின்னர் பலமுறை அழைத்து விசாரணை செய்தபோதும் முன்னுக்கு பின் முரனாக பேசியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க திண்டுக்கல் மாவட்டக்காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு தாக்கல் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிதரப்புல் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul